# எட்டுத்தொகைப் பாடல்களில் வாழ்வியல் அறம்

# Ettu Thogai Padalgalil Valviyal Aram

***இரா. சதாசிவம்***
இணைப்பேராசிரியர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

***தி.அமர்ராஜ்***
தமிழியல்துறை
முனைவர்பட்ட ஆய்வாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

**R. Sathasivam**
*Asssociate Professor*
*Department of Tamil*
*Annamalai University, Annamalai Nagar*

**T. Amarraj**
*Asssociate Professor*
*Department of Tamil*
*Annamalai University, Annamalai Nagar*

**ஆய்வுச் சுருக்கம்**

*தனி மனித வாழ்வை நெறிப்படுத்தி வாழ்வாங்கு வாழ்ந்த நம் சான்றோர், அவ்வப்போதுச் சுட்டிக்காட்டிச் சென்ற மரபு வழிபட்ட நெறிமுறைகளே வாழ்வியல் அறமாகும். வாழ்வியில் அறம் என்பது மனிதர்கள் ஒருவருக்கொருவர் உதவுவதற்கு வாய்ப்பாக அமைந்த நற்செயல் ஆகும். பசியென்று வந்தவர்க்கு புசியென்று உரைத்து அன்னமிடுவது தமிழ் மக்களின் அடிப்படை அறப்பண்பாக அமைந்துள்ளது. மானிடம் தழைக்க சங்க இலக்கியம் வழங்கிய வாழ்வியல் அறம் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.*

***முக்கியச் சொற்கள்:*** *வாழ்வியல் அறம், சங்க இலக்கியம், எட்டுத்தொகை, மனித வாழ்கை, தமிழ் மக்கள்.*

**Abstract**

*The virtues of life are the traditional norms that our witnesses, who have lived their lives with the intention of regulating and uplifting the individual human life, have pointed out from time to time. Virtue in life is a good deed in which human beings have the opportunity to help each other. It has become a basic virtue of the Tamil people to feed the hungry with food. This article explores the biological virtues provided by Sangam literature to invigorate mankind.*

***Keywords:*** *Biological Virtues, Sangam Literature, Ettu Thogai, Human Life, Tamil People*

**Citation**

Sathasivam, R. and T. Amarraj “Ettu Thogai Padalgalil Valviyal Aram.” *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 2, 2022, pp. 5–17.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20136090*

**Citation**

Sathasivam, R., and T. Amarraj. "Ettu Thogai Padalgalil Valviyal Aram." *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 1, 2022, pp. 5–17.

**முன்னுரை**

*சங்க காலத்தில் நாடானது நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு பிரிக்கப்பட்டு அந்நிலத்தின் வழியே மக்களும் தங்களது வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தனர். குறிப்பாகக் காடும் காடு சார்ந்த இடத்தை முல்லை என்றும், மலையும், மலை சார்ந்த இடத்தை குறிஞ்சி என்றும், வயலும் வயலைச் சார்ந்த இடத்தை மருதம் என்றும், கடலும் கடல் சார்ந்த பகுதியை நெய்தல் என்றும் பிரித்து அவ் ஐந்நிலத்தை ஒட்டியே வாழ்ந்து வந்தனர். இவ்வாறு நிலத்தை ஒட்டிவாழ்ந்த சங்க கால மக்கள் மொழிக்கு மட்டும் இலக்கணம் வகுத்துக் கொள்ளாமல் அவர்களுடைய வாழ்க்கை முறைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்டு வாழ்ந்த பெருமைக்குரியவர் ஆவர். அந்த வகையில் சங்க இலக்கிய எட்டுத்தொகைப் பாடல்கள் உணர்த்தும் வாழ்வியல் அறங்களை காண்பதாகவே இக்கட்டுரை அமைகிறது.*

*சமுகத்தில் முழுமையும், மகிழ்ச்சியும் அமைதியும் வேண்டும் எனில், ஒவ்வொரு மனிதனும் தனக்கென்று சில கடமைகளையும் கட்டுப்பாடுகளையும் ஒழுக்கங்களையும் விதித்துக் கொள்ள வேண்டும். இதனால் அவர் பெற்ற அனுபவத் தொகுப்புகளையே வாழ்வியில் நெறிகள் என்று கூறலாம். வாழ்வியல் அறநெறிகள் மாறாாத உலக பொதுவான கருத்துடையவை. இது தனிமனித வாழ்வியல் நெறிகள், சமூக வாழ்வியல் நெறிகள் என இருபிரிவுகளாக பகுக்கலாம். இச்சமுக வாழ்வியல் நெறிகளே அறங்களாக பிரதிபலிக்கின்றன.*

**திறவுச் சொற்கள்**

*எட்டுத்தொகை - இலக்கியம் - சமுதாயம் - வாழ்வியல் - நெறி - அறம் - கொடை - வாழ்வியல் அறம்.*

*ஒரு தனிமனிதன் பிறரிடம் எந்த எந்தப் பண்புகளை எதிர்பார்க்கின்றானோ, அந்தப் பண்புகளைத் தானும் பெற்றிருக்கவேண்டும் என எண்ணும்போது, அந்தப் பண்புகள் யாவும் தன் வாழ்வில் பின்பற்ற வேண்டிய வாழ்வியல் அறிநெறிகளாக ஆகிவிடுகின்றன.*

*"ஒரு மனிதன் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் வெளிப்பாடாகத்தான் சில உண்மைகள் தோன்றுகின்றன. அவையே தனி மனித வாழக்கையை செம்மைப்படுத்தவும், மேன்மைப்படுத்தவும் உறுதுணைப் புரிகின்றன. அதுவே அறச்செயல்களாகப் பரிணமிக்கின்றன."[1] என்கிறார் முனைவர் இரா. சந்திரசேகரன்.*

**அறம் - பொருள் விளக்கம்**

*"அறு" என்னும் வினைச் சொல்லின் அடிப்படையாகப் பிறந்தது அறம் என்னும் சொல்லாகும். அறு என்னும் அடிச் சொல்லிற்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, துண்டி, வேறுபடுத்து, உருவாக்கு, என்று பலவகை பொருள்கள் வழங்கி வருகின்றன. "அறு" என்பதற்கு முழுவதும், மிகவும் தெளிவான, செவ்மையானது என்று பொருள் உணர்த்துகின்றது தமிழ் அகராதி.[2] அறம் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதி அன்று. வாழ்க்கை முழுவதுமே அறமாகும். மக்கள் தாம் வாழும் வாழ்க்கை முழுவதும் தர்மமுறையில் இருப்பது அறவாழ்க்கை எனலாம்.*

*"அறம் என்பதற்கு தருமம், புண்ணியம், அறச்சாலை, தரும தேவதை, யமன், தகுதியானது, சமயம், ஞானம், நோன்பு, இதம், இன்பம் தீய பயன் உண்டாக்கும் செயல் என்கின்றது. தமிழ் அகராதி "[3] தமிழ் அகராதி நீதி, ஈகை, அறக்கடவுள், சமயம், கடமை, புண்ணியம்[4] என்று பொருள் வழங்குகின்றது.*

*தமிழ் பேரகராதி "அறம் என்பதற்கு தருமம், நேர்மை, நற்பயன், புண்ணியம், பெரியோர் இயல்பினொன்று, தகுதி, சமயம், ஞானம், நோன்பு, அறச்சாலை, வசைக்கவி, யமன், கற்பு, அறநூல், அறக்கடவுள், ஒழுக்கம் இன்சொல், இல்வாழ்க்கை"[5] என்கிறது.*

*அறம் என்பதற்கு அபிதான சிந்தாமணி 32 பொருள்களைத் தருகிறது.[6] ஆதுர சாலை, ஓதுவார்க்கு உணவு, பசுவிற்கு வாயுணவு, சிறைச் சோறு, ஐயம், தின்பண்டம் நல்கல், அறவைச்சோறு, மகப்பேறுவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப் பிணம் சுடல், அறவைத்துரியம், சுண்ணம், நோய் மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர்க்காத்தல், தண்ணீர்பந்தல், மடம், தடம், கா, ஆவுறிஞ்சுற்றி, விலங்கிற்கு உணவு, ஏறு விடுதல், விலைக்கொடுத்து உயிர்க்காத்தல், கன்னிகாதானம் என்ற பொருள்களைக் குறிப்பிடுகிறது. அறவியில் என்ற சொல்லிற்கு* Ethics *என்னும் ஆங்கிலச் சொல் பயன்படுத்தப்படுகின்றது. இது கிரேக்க மொழிச் சொல்லாகும். இன்றைய சமுதாயச் சூழலில் மாரல்* (Maral)*என்ற ஆங்கிலச் சொல்லும் அறத்தின் பொருளாக அமைகின்றது. இது இலத்தீன் மொழியில் காணப்படும் மோர்சு என்னும் சொல்லின் திரிபு ஆகும். இதற்கு பழக்க வழக்கம் என்பது பொருளாகும். இதனால் நல்ல பழக்க வழக்கங்களே நல் அறம் எனக் கூறப்படுகின்றது.[7]*

*நல்லது மற்றும் தீய செயல்களின் மூலம் தானே வெளிப்படும் மக்களுடைய நடத்தையைப் பற்றிய ஆய்வியல்களையே அறவியில் எனலாம். இதை சமுதாயத்தில் வாழும் மக்களின் நடத்தையைப் பற்றி ஆராயும் கலை என்று கூறலாம். "நடத்தை என்பது வாழ்வை நெறிப்படுத்தும் மனிதனின் நல்லொழுக்கமாகும். நன்னடத்தை, ஒழுக்கம், பண்பாடு, எல்லாமே அறம் என்னும் பொருளை தாங்கி நிற்கின்றன. பண்பாடு என்பது மக்கள் கற்றுணர்ந்த நடத்தை முறையின் தொகுப்பு எனலாம் என பக்தவத்சல பாரதி வரையறுக்கிறார்.[8] கிரேக்க அறிஞர் சாக்ரட்டீ" அறநெறிகள் பற்றி, அறவியல் விழுமியங்கள், நம்பிக்கை, கண்டிப்பான வாழ்க்கை நடத்தை, ஞானம், ஒழுக்கம் ஆகியவற்றின் ஒருமைப்பாடு என்றும், அறிவும் சிந்தனையும் சுயநிருபணமும் அறத்தின் உயிர் நாடிகள் என்றும் கூறுகிறார். எனவே அறமே அறிவு, அறிவே அறம் என்றும்[9] வரையறுக்கிறார்.*

*"கடவுளைப் போற்றுவதன் மூலம் மனிதர்கள் உயாந்து விட முடியாது. மனித வாழ்க்கை முழுமையுறத் துணை செய்வது அறநெறியாகும். அறநெறி வழியின் நின்று பண்புடையவராக வாழ்பவரை மட்டுமே உலகம் பாராட்டும்"[10]. என்கிறார் கன்புசியஸ்.*

*மனதில் யாதொரு குற்றமும் இல்லாமல் வாழ முற்படுதல், பிறரிடம், அழுக்காறு கொள்ளாதிருத்தல் என்பவை, என்றும் மாறாத அறங்கள் என்று விளக்குகிறார்[11] அ.ச.ஞானசம்பந்தன்.*

*அறத்தோடு நடந்து கொள்கின்றவர்களுக்கு ஆக்கமும், புகழும் உண்டு. அறம் மீறினால் தண்டனையும் உண்டு. எனவே அரசு தண்டையிலிருந்து தப்பினாலும் தெய்வ தண்டனையின்று தப்பமுடியாது என்ற அறத்தின் மேல் ஆழமான நமபிக்கை மக்களிடத்தில் காணமுடிகின்றது. இன்றைய சூழலில் குழந்தைப் பருவத்திலேயே "அறம் செய விரும்பு"[12] என போதிக்கப்படுகின்றது. இது ஒரு மனிதன் பண்பட்டவராக செயல்பட ஆரம்ப பருவத்திலேயே கற்று உணர்த்தியதிலிருந்து அறத்தின் மேன்மையை அறிய முடிகின்றது.*

**இலக்கியம் காட்டும் அறம்**

*இலக்கியம் இலக்கியத்திற்காக மட்டுமல்லாமல் மக்களுக்காக படைக்கப்படுவதால் அது நீண்ட நிலைத்தப் பயனைத் தருகின்றது. இதனால் சமுதாய நலனைக் கருத்தில் கொண்டு வாழ்வியல் அறங்களை வகுத்துத் தருவதில் இலக்கியங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன எனலாம். "இலக்கியம் அளிக்கும் இன்பம் நிலைப்பேறு உடையதாக இருக்க வேண்டுமானால் மனித வாழ்க்கையை மேம்படுத்தும் அறநெறிக் கருத்துகளும் அனுபவ உண்மைகளும் அதில் இடம் பெற்றிருக்க வேண்டும்" என்பார் எலியட்.*

*மக்களது வாழ்க்கை மாட்சியுற, மனிதன் மனிதனாக வாழ, தெய்வ நிலை எய்த, அவரது எண்ணங்களையும் உள்ள உணர்ச்சிகளையும் இயக்கும் இயற்கை பேராற்றலே அறம் ஆகும். சங்க இலக்கியத்தில் அறமும் பண்பாடும் நிறைந்த வாழ்க்கையைக் காணமுடிகின்றது. பண்பட்ட சமுதாயத்தைக் காண்பதற்கு அத்தியாவசியத் தேவை அன்பும் அறமும் ஆகும்.*

*இல்லறத்தில் கணவன் மனைவியின் அன்பு நிலையும், அன்பொடு பிறர்க்குச் செய்யும் ஈதல் அறமும், அவற்றினால் பெற்ற நற்பண்பும் வாழ்க்கைக்கு பெரும் பயனாக அமையும். மேலும், அன்பு நிலை இல்லறத்திற்கு மட்டுமன்று மற வாழ்க்கைக்கும் பொருந்தும் என்பதை,*

***"அறத்திற்கே அன்புசார் யென்ப அறியார்***
***மறத்திற்கும் அஃதே துணை"***[13]

*எனவரும் குறள் வழி பகை நீங்குவதற்கும் அன்பு பெருந்துணையாக அமைகின்றது என்பதால், அறம் செய்ய அன்பு வேண்டும் என்பது புலனாகின்றது.*

*அறம், பொருள், இன்பம் என்னும் வாழ்வியல் நியதிகளையே தமிழ் இலக்கியக் கோட்பாடு முன்னிறுத்துகின்றது. இவற்றுள் சங்கப் புலவர்கள் அறத்திற்கே முதன்மை கொடுத்துள்ளனர். மனித வாழ்வின் அனைத்து நிலைப்பாடுகளிலும் அறம் வலியுறுத்தப்பட்டது. அவ்வடிப்படையிலே மக்கள் வாழ்வியல் அமைவதை நிறுவுகின்றன.*

*மக்கள் நலத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் சமுதாயம் வரையறுத்துக் கொண்ட ஒழுக்க நெறியே அறமாகும். அறம் என்னும் சொல்லிற்கு ஈகை, புண்ணியம், வழக்கம், முறைமை என்று பல பொருள்கள் இலக்கியத்தில் காணப்படுகின்றன. சங்க இலக்கிய பாடல்கள் வழி மன்னர்களும் வள்ளல்களும் அறத்தை உணர்ந்து செயல்பட்டதை அறிந்துக் கொள்ள முடிகின்றது.*

*ஒழுக்கம், இடம்படின் வீழ்களிறு உண்ணாத புலியினும் சிறந்த தாழ்வில் உள்ளம், வாழ்தல் வேண்டி பொய்க் கூறாத வாய்மை, பண்பாட்டினையே நாகரிகமாகக் கருதிய*

*புதுமை, இல்வாழ்க்கை நடத்தவும், அறம் செய்யவும், அறவழியில் பொருள் ஈட்டிய வினை ஆண்மை, அறம் செரிந்த தொழில்கள், தான் பெற்ற பயனைப் பிறரும் பெற வேண்டும் என்று நினைத்த உயர்ந்த உள்ளம், உயிர்களைக் காத்த மாட்சிமை, யாவரும் கேளிர் என்ற ஒழுக்கம், இருப்பது கொண்டு சுற்றம் ஓம்ப வாழ்ந்த மாண்பு, பழிபாவங்களுக்கு அஞ்சிய அறவுணர்வு யாவரையும், மதித்துப் போற்றிய அறப்பண்பு என பழந்தமிழரின் உயரிய வாழ்க்கை அறநெறிகளை இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் பெரிதும், வலியுறுத்தப்படுவது அறமாகும். ''அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்'' என்ற சிலம்பின் முப்பெரும் உண்மைகளில் ஒன்றின் மூலம் அரசியல் நெறிமுறையிலிருந்து தவறியவர்களுக்கு தர்மம் யமனாக மாறிவிடும் என்பதை எடுத்துரைக்கிறது.*

*மணிமேகலையில்,*

**''*ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்*<br>*ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்*<br>*மேற்றே உலகின் மெய்நெறி வாழ்க்கை*''**[14]

*என்று அறம் என்பது அனைத்து உயிர்களுக்கும், உணவு, உடை கொடுத்து துன்பத்தை நீக்குவது என்கிறது.*

**''*இன்று கொல் ? அன்று கொல் என்று*<br>*கொல் என்னாது பின்றையே நின்றது*<br>*கூற்றம்*''**[15]

*என்று நாலடியார் பாடலிலும்,*

**''*தன்னொடு செல்வது வேண்டின் அறஞ்செய்க*''**[16]

*என நான்மணிக்கடிகையும்,*

**''*அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்*<br>*புறத்த புகழும் இல*''**[17]

*என குறளும் அறத்தின் தன்மையைக் கூறுகின்றது.*

*மேலும், ''மனத்துக்கண் மாசின்மை, அறவழிநிற்றல், அன்புடைமை நட்பு, பண்புடைமை, அடக்கமுடைமை, பிறர்மனை நயவாமை, வெஃகாமை, தீவினையச்சம், அழுக்காறமை ஆகியன தனிமனித அறங்களாக நீதி நூல்களில் கூறப்படுகின்றன.*

**''*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்*''**[18]<br>**''*செல்வத்துப் பயனே ஈதல்*''**[19]

*என்பவை சிறந்த அறமாகக் கருதப்பட்டன. அறநெறி வழி வாழ்தலே சிறப்பென பண்டைத் தமிழர் விரும்பினர். அறம் அல்லாத வழியில் வரும் செல்வமும் இன்பமும் நிலையற்றவை என நினைத்தனர். இதனால் அறம் என்பது மனிதன் தனக்கென அமைத்துக் கொண்ட ஒரு சீரிய வாழ்க்கை முறை எனலாம்.*

*மக்கள் அறத்துடன் வாழ வேண்டும். அவ்வறம் செய்வதற்கு பொருள் வேண்டும். பொருளை அறவழியில் ஈட்டிட வேண்டும். பெற்ற பொருளை பெறாருக்குரீ, என்று பொருளை பெற முடியாதவர்க்கு பொருள் பெறும் வழிமுறையைக் கூறி வழி காட்டுதல் வேண்டும். இரப்பவர் பெற்ற மகிழ்வை எண்ணி புரவலர் இன்பம் துய்க்க வேண்டும். இதனால் மாண்ட*

*பின்பும் மண்ணுலுகம் பேசும் தகைமையாளராக நற்பெயர் பெறும் வீடுபேற்றை பெறலாம். எனவே, அறம் செய்க, அறவழிச் செல்க என்று சங்க இலக்கியம் அறிவுறுத்துகின்றது.*

*அறப்பண்பு ஒவ்வொரு இனத்திற்கும், வரையறுக்கப்பட்ட அறக் கருத்துக்கள் உண்டு. தமிழ் இனமும், பன்னெடுங்காலமாக அறத்திற்கு முதன்மைக் கொடுத்து வாழ்ந்து வருகின்றது. அதனால் தான் தமிழரின் அறம் பல்வேறு பொருள் தரத்தக்க எல்லையை உடையதாக உள்ளது.*

*ஒழுக்கம், உயர்ந்தோர் வழக்கு, நீதி, கடமை என்று அறம் உணர்த்தும் வாழ்வியலைக் காணலாம். தாம் வாழும் வாழ்நாள் முழுவதும் மேற்கொள்ள வேண்டிய அறத்தினை,*

***"ஆற்றுதல்" என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்,***
***"போற்றுதல்" என்பது புணர்ந்தாரைப் பிரியாமை,***
***"பண்பு" எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்,***
***"அன்பு" எனப்படுவது தன்கிளை செறாஅமை,***
***"அறிவு" எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்,***
***"செறிவு" எனப்படுவது கூறியது மறாஅமை,***
***"நிறை" எனப்படுவது மறை பிறர் அறியாமை,***
***"முறை" எனப்படுவது கண்ணோடாது உயிர் வெளவல்,***
***"பொறை" எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்."[20]***

*என்ற கலிப்பாடல் வழி, ஒவ்வொருவரும் நடந்து கொள்ள வேண்டிய அறநெறியினைக் கூறுகின்றது.*

*இல்லற வாழ்க்கையில் வறுமை உற்றவர்க்கு ஒன்றை உதவுதல் நட்பாகக் கூடினாரைப் பிரியாதிருத்தல் உலக ஒழுக்கம் அறிந்து ஒழுகுதல் தன் சுற்றத்தாரை சினவாதிருத்தல் அறியாதார் தன்னைப் பார்த்துக் சொல்லும் சொல்லைப் பொறுத்துக் கொள்ளுதல் கூறியது ஒன்றைத் தான் என்றும் மறவாதிருத்தல், மறைவான ஒன்றை பிறர் அறியாது காத்தல் தீங்கு செய்தவர் நம்மவர் ஆயினும் கண்ணோடாது அவர் குற்றத்திற்கு ஏற்ற உயிரைக் கொள்ளுதல், தன்னைப் போற்றாதவரிடம் பகைக் கொள்ளாது பொறுமையோடு இருத்தல்*

*மேற்கண்ட குணங்களை அறிந்து செயல்படுவதினால் தானும், தன்னைச் சூழ்ந்த சமுதாயமும் உயர்வடையும் என்ற அறச்சிந்தனை கலித் தொகை தோழி வாயிலாக புலவர் நல்லந்துவனார் தம் கருத்தினை எடுத்துரைக்கிறார்.*

*அறிவியல் தொழிற்நுட்ப வளர்ச்சியின் வேகமும் ஊடகப் பெருக்கமும் தனிமனித ஒழுக்கத்தையும் சமுதாய பண்பாட்டையும் சிதைந்து வருவதைக் கண்கூடாகக் காணமுடிகின்றது. எனவே, சமுதாய முன்னேத்திற்குத் தேவையான அனைத்து அறப்பண்புகளையும் அறிவுறுத்துகின்றது. அதுவே நற்சான்றோர்க்குரிய நன்னடைத்தையும் ஆகும் என்பதை கலித்தொகை உணர்த்துகின்றது.*

*தனிமனித ஒழுக்கம் சங்ககாலத்தில் தனிமனிதன் மேற்கொண்ட ஒழுக்கமே மனிதனின் வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைந்தது. அதுவே கட்டுக்கோப்பான சமுதாயத்தையும், உருவாக்கித் தந்துள்ளது.*

*இன்னவை நல்லொழுக்கம், இன்னின்னது நல்லறம் என்று சங்க காலத் தமிழர் அனைவரும் உணர்ந்திருந்தனா. தன்னைச் சூழ்ந்து வாழ்வோரின் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கி வாழ்வியல் அறங்களை மனதில் பதிய வைத்துக் கொண்டனர். அதனின்றும் மாறாமல் வாழ்ந்தனர். இன்றைய இல்வாழ்க்கையினருக்கு மட்டுமன்றி காதல் ஒழுக்கத்தினருக்கும் வழிகாட்டுவனவாக விளங்குகின்றது.*

*இல்லறம் என்பதே அறம் என்று கருதப்பட்டதால் சங்க இலக்கியத்தில் அகநூல்களில் காணப்படும் அறந்தொடுநிற்றல என்பதே அறம் எனக் கூறப்படுகிறது. களவொழுக்கத்தினைத் தக்க முறையில் தோழி, தாய், சுற்றத்தினருக்கு வெளிப்படுத்தி கற்பொழுக்கமாக அமைத்து வாழ்ந்த அறவாழ்க்கையை எட்டுத்தொகை விளக்குகிறது.*

*பழந்தமிழரின் அகவாழ்க்கை நெறிகள் உலகத்தார்க்கே பொதுவான நாகா ீக பண்பாடாக விளங்குகின்றன.*

*அன்பு, இரக்கம், ஈகை, விருந்தோம்பல், மாறாக்காதல், மாறாத மனத்திண்மை, திண்ணிய கற்பு, ஆளுமைத்தன்மை முதலான அறநெறிகள் தமிழர்க்கு இன்பத்தையும் பயனையும் புகழையும் சேர்த்துள்ளன.*

*இவ்விலக்கிய நோக்கத்தின் அடிப்படையில் டாக்டர் சரளா. ராஜகோபாலன், "தங்கள் வாழ்க்கை அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைந்த எண்ணம், பின்வரும் தலைமுறைக்கும், பயனிக்கும் அகவுணர்வுகளைப் படைக்க விரும்பியமை போன்றவை அக இலக்கியத் தோற்றத்திற்கு சில காரணங்கள் என்று குறிப்பிடுகிறார்.*[21]

*சங்ககால தமிழரின் வாழ்க்கை அனுபவங்கள் பிறரோடு பகிர்ந்துக் கொள்ளக் கூடியவனவாக அறநெறியுடன் விளங்கியதைக் காணமுடிகின்றது. களவொழுக்கம் மேற்கொண்ட தலைவி, களவு வெளிப்படும் முன் காதலனுடன் போயினாள். இதனை அறிந்த தாய் சினம் கொள்ளவில்லை. மகள் பிரிவிற்கு சற்றே வருந்துகிறாள். இளம் வயதிலேயே மகளிடம் செறிந்திருந்த அறிவுடைமையை எண்ணி அறநெறி இது எனத் தெளிநத் மகள் என்று போற்றுகிறாள். மேலும், அவள் சென்ற பாலை வழி சுடாமல் குளிர்க, சூடு தணிக என்று வாழ்த்துவதை,*

***"சுரம் நனி இனிய ஆகுகதில்ல-***
***"அறநெறி இது" எனத் தெளிந்த என்***
***பிறை நுதற் குறுமகள் போகிய சுரனே!"***

*என்னும் ஐங்குறுநூறு பாடலால், உடன் போக்கினைப் பாராட்டுவது தாயின் அறவுணர்வைக் காட்டுகின்றது. கற்பினைக் காத்துக் கொள்ளவும் காதலின் தூய்மையைக் காக்கவும், தலைவி கொண்ட முடிவு தலைவியின் அறவுணர்வை வெளிப்படுத்துகின்றது.*

*மற்றொருத்தி களவு வெளிப்படாமல் தலைவனுடன் செல்கின்றாள.˙ இதை அறிந்த தாய் தேடும் போது எதிர்வந்த அந்தணச் சான்றோரிடம் வினவுகிறாள். அதற்கு அந்தணர், மிக்க கற்பினள், காதலனை வழிபட்டுப் போயினள், நல்லறமும் அதுவே என்று கூறுகிறார்.*

*இதனால், தலைவியின் அறவுணர்வும், உடன் போக்கினை ஏற்றுக' கொண்ட தாயின் அறவுணர்வும் உடன் போவது கற்பு வழிபட்டது என்று போற்றும் சான்றோரின் அறவுணர்வும் தமிழரின் வாழ்க்கைக் கட்டமைப்புக்கு வலுவூட்டுகிறது.*

*இன்றைய சமுதாயத்தில், பெற்றோரை இசையச் செய்து காதலில் வெற்றி பெற்று மணந்து கொள்ளும்போது மகிழ்வதும், மணந்துக் கொள்ள முடியாதபோது வாழ்வே அற்றுப்போனதாக எண்ணித் துவண்டுவிடுகின்றனர். இளைஞனிடத்து பொருள் ஈட்டும் திறன் இல்லாமையால் காதலியை மணந்துகொண்டு எப்படி வாழ்வது என்று மனம் தடுமாறுவதும், காதலித்து பின் மனம் மாறி வேறு மணம் கொள்வதும் இன்று பரவலாக உள்ள நிலையாகும். இதற்கு அடிப்படைக் காரணம் இருவரிடத்தும் ஒழுங்கு இன்மையே எனலாம். எனவே பழந்தமிழரின் வாழ்வியல் நெறிகளை அறிந்துக் கொள்வதால் வாழக்கை நன்னெறியுடன் விளங்கும் எனலாம். ஒவ்வொரு தாயும் தன் மகளிடத்து ஒழுக்கத்துடன் இருக்க பல அறிவுரைகளை தன் அனுபவத்தாலும் முன்னோர் உரைத்த வழியும், அறிந்து எடுத்துரைப்பர். அதன் வழி, இங்கு கலித்தொகை, தலைவி அறத்தோடு நடந்துக் கொள்கிறாள். தமையனின் ஒருநாள் பொழுதுள் தன் சினம் தணிந்து இருவரிடமும் குற்றம் இல்லை என தமையன் கூறுகிறான். பின்னர் இரு மனம் இணைய நாள் பார்த்து தலைவன் பெண் கேட்டு வருவதும், தலைவியும் தோழியும் வரைந்து வாழும் நாள் விரைவாக வருக என்று வேண்டுகின்றனர். இல்லத்தில் உள்ளவர் ஒழுகிய அறத்தினையும் எடுத்துக்காட்டுவதன் மூலம், தனி மனிதன் மேற்கொண்ட ஒழுக்கத்தால் குடும்பமும் அதை சார்ந்த சமுதாயமும் நற்பேறு பெறும் என்பதை உணரலாம்*

***"அறத்தோடு நின்றேனைக் கண்டு***
***திறம்பட என்னையர்க்கு உய்த்து உரைத்தாள்,***
***யாய், அவரும் தெரிகணை நோக்கி, சிலை***
***நோக்கி, கண் சேந்து,***
***ஒரு பகல் எல்லாம் உருந்து எழுந்து,***
***ஆறி,***
***"இருவர் கண் குற்றமும் இல்லையால்***
***என்று தெருமந்து சாய்த்தார் தலை."*** [23]

*என்ற பாடலில் தலைவி, தாய், தமையன், அறத்துடன் நின்றதாக குறிப்பிடுகிறது. தலைவியின் களவொழுக்கத்தினைக் கண்டு கோபம் கொள்வதும், பின் அதன் நெறி அறிந்து அமைதி கொள்வதையும் காட்டுகின்றது.*

*களவு வெளிப்படுத்திய தன்மையை மேற்கண்ட பாடல் வழி காணமுடிகின்றது. களவு உண்மையை வெளிப்படையாகத் தெரிவிப்பதை அறமாகக் கருதவில்லை. குறிப்பாக தெரிவிப்பதே அறம் என்று கருதினர் என்பது புலனாகின்றது.*

*பழந்தமிழர் தம் காதல் ஒழுக்கத்தில் ஈடுபட்டு பெருமகிழ்வு எய்தினர். அக்காதல் ஒழுக்கத்தினை வரைந்து வாழும் இல்லற வாழ்க்கைக்கு ஏற்ப அமைத்து கொள்ளவே பெரிதும் விரும்பினா.' விருந்து பேணுதல், சுற்றம் ஓம்புதல், மக்கட்பேறு எய்துதல் போன்ற பயன்கள் விளைதலின் வரைந்து வாழும் இல்வாழ்க்கை என்ற அறம் காலந்தோறும் போற்றும் வகையில் நிலைத்து நிற்கின்றது.*

*''இறை வழியையும், இயற்கை நோக்கினையும் படைப்பமைப்பையும், இன்னோரன்ன பிறவற்றையும் கூர்ந்து நோக்குழி ஒருத்தி ஒருவனுடனும், ஒருவன் ஒருத்தியுடனும் கூடி வாழ்தலே அறம் என்று புலப்படும் அதுவே இல்லறம் என்று விளக்குகிறார்''' - திரு.வி.க.*

*தொல்காப்பியர் வகுத்த பெருமையும் உரனும் ஆகிய ஆண்மைப் பண்புகள், தலைமகனிடத்து செரிந்து விளங்கின. பணிவுடைமை, அடக்கமுடைமை, ஈகை, நடுவுநிலைமை, இன்சொல் மாறாகாதல், பொருளீட்டும் வினையாண்மை என்பன போன்ற பண்புநலன்களோடு வாழ்வதையே தலைமகன் வாழ்வியல் அறமாக கருதியதை எடுத்துரைக்கின்றது.*

*கொடை அல்லது தானத்தை சமுதாய அறம் எனலாம். ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க முயலும் அறப்பண்பு தானம். ஏழை, எளியவர் மீது இரக்கம் காட்டுதல் ஒரு சமுதாய அறம் தானம் என்பர். தனிமனிதன் தான் ஒழுக்கம் குன்றாமல் நடப்பது மட்டும் அறமல்ல. தன் குடும்பம், சமுதாயம் முதலியவற்றிற்கு ஆற்ற வேண்டிய கடமையும் அறத்தின் பாற்பட்டதாகும். எனவே அது வாழ்வியல் முறையாக பரிணமிக்கிறது.*

*சங்க இலக்கியத்தில் வாயுறை வாழ்த்து, செவியறிவுறுஉ என்னும் துறைகளில் மன்னர்களுக்கும், வள்ளல்களுக்கும் அறத்தின் இன்றியமையாமையை வெளிப்படுத்தும் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. நாட்டை ஆளும் மன்னர்களும் அறத்தை நிலை நாட்டியுள்ளதைக் காணமுடிகிறது. முடியாட்சியில் குடிமக்கள் நலம் காணும் குடியாட்சி பண்பே மன்னர்க்குரிய அறமாக வலியுறுத்தப்பட்டுள்ளது.*

***''நெல்லும் யிரன்றே நீரும் உயிரன்றே***
***மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்'''***

*என்பதால் மன்னின் அறச்செயலே உலகைக் காக்கும் கருவியாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அரசனின் சிறப்பு அவனது அறநெறி ஆட்சியில் உள்ளது என்பது புலனாகிறது.*

*கடமை கொடுங்கோல் செய்யும் அரசனின் ஆட்சியில் குடிகள் வருத்தம் அடையும். அவர்கள் முறையின்றி பொருள்களை விரும்பினால் அரசனின் ஆட்சி முறைக் கேடுறும் என்பது உறுதி. எனவே, அரசு பணியாற்றுபவர் நன்மனம் உடையவராகவும், செங்கோல் ஆட்சி நடத்துபவராகவும் இருக்க வேண்டும் என்பதை,*

***''அலவுற்றுக் குடி கூவ, ஆறு இன்றிப்***
***பொருள் வெஃகி***
***கொலை அஞ்சா வினைவரால் கோல்***
***கோடியவன் நிழல்***
***உலகு போல் உலறிய உயர்மர***
***வெஞ்சுரம்'''***

*என்ற கலிப்பாடலில் ஒரு மன்னன் நேரிய முறையில் தன் கடமையைச் செய்ய வேண்டு'ம் என வலியுறுத்துகின்றது.*

***''குடி புறங்காத்து ஓம்பும் செங்கோலன் வியன் தானை''[27]***

*என்பதால் குடிகளையும் காத்து, தன்னையும் பாதுகாக்கும் செங்கோல் ஆட்சியால் அந்நாடு பெறும் நன்மையை எடுத்துக்காட்டுகின்றது.*

*ஓர் அரசன் மட்டும் அல்லது தனி மனிதனும் பெற்றிருக்க வேண்டிய பண்பாக,*

***"நயனும், வாய்மையும் நன்னர் நடுவும்.***
***இவனின் தோன்றிய இவை என இரங்***
***புரை தவ நாடி பொய் தபுத்து, இனிது ஆண்ட***
***அரைசனோடு உடன் மாய்த்த நல் ஊழிச்***
***செல்வம் போல்"[28]***

*என்ற கலிப்பாடல் அன்பு, நடுவுநிலைமை, உண்மை தவறி ஆட்சி செய்தான் எனில் அவன் சேர்த்த செல்வமும் அழியும் என்பதை எடுத்துரைக்கின்றது. எனவே, உயிர்களிடத்தில் அன்பும், வேண்டியவர் வேண்டாதவர் என்று பார்க்காத நீதி நிலைநாட்டும் நடுநிலைமையும் வாக்கினிலே உண்மையும் கொண்டு திகழ வேண்டும். பொய் தவிர்த்து இனிமை உண்டாக அரசாட்சி புரிய வேண்டும் என்று அரசர்க்குரிய கடமையை எடுத்துரைக்கின்றது.*

**தொாகுப்புரை**

*"அறம், பொருள், இன்பம், வீடு என்ற அடிப்படையில் இலக்கியம் அமைந்ததோடு தனிமனிதனுக்கு ஏற்ற வாழ்வியல் அறத்தினையும் உணர்த்தி நின்றதை ஆய்வில் குறிப்பிடுகின்றது.*

*"அன்பின் வழியது உயிர்நிலை என்று மொழிவது போல அன்புமயமானவர்கள் தாங்கள் ஈட்டியப் பொருளை இல்லாதவர்களுக்கு அளித்து தானும் தன்னைச் சார்ந்தோரும் இன்பம் பெறும் வகையில் அறச்செயல்களை புரிந்துள்ளனர் என்பதை எடுத்தியம்பியுள்ளது.*

*"தனிமனிதன் முதல் சமூகம் வரை அனைத்து தரப்பினரும் தன்னால் இயன்ற பொருளைப் பகிர்ந்து அளித்து மகிழ்ந்திருந்த பண்பாடு நிறைந்த சமூக மக்களையும் கண்டுணர்ந்திருக்கின்றது.*

*"பொருள் ஈட்டுவதில் சிரமம் ஏற்படினும், தன் இம்மை, மறுமை வாழ்வில் இன்பநிலை எய்தவேண்டி நீங்கா புகழுக்காக மனதை ஒருநிலைபடுத்தி பொருளை கொண்டுவந்து அறம் செய்த நிலையைச் சுட்டிக்காட்டியுள்ளது.*

*"தாம் வாழும் நாட்களில் இன்பமாக வாழ வேண்டும் எனில் பொருள் வேண்டும். அப்பொருளைக் கொண்டு தான் மட்டும் இனிது வாழ்வது பண்பாடு ஆகா என்று உணர்ந்திருந்தனர்.*

*"அழியாப்புகழுடன் வாழ ஈதல் பண்பு சிறந்தது என்பதை உணர்ந்து ஈந்துவக்கும் மனநிலைக் கொண்ட மக்களை இவ்வியல் எடுத்தியம்பியுள்ளது. உதவி புரிதல், நன்றி மறவாமை, சொல் வன்மைக் காத்தல், நற்செயல் புரிதல் என்று உலக நீதிமுறையில் மக்கள் வாழ்ந்த வாழ்வியல் நெறியைச் சுட்டிக்காட்டியுள்ளது.*

**சான்றெண் விளக்கம்**

1. *முனைவர்இரா.சந்திரசேகரன்.தமிழ் இலக்கியம் வாழ்வியல் அறம் ப-29*
2. *முனைவர்ச.வே.சுப்பிரமணியன் 'சுமெய்யப்பன் தமிழகராதிசுசு ப-76*

3. மேலது ப-77
4. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ் அகராதி ப-80
5. சந்தியா நடராஜன் பதி.ஆ மதுரைத் தமிழ் பேரகராதி ப-20
6. ஆ.சிங்காரவேலுமுதலியார். அபிதான சிந்தாமணி.ப-108.
7. பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல் ப-229.
8. மேலது. ப-228
9. வாழ்வியல் களஞ்சியம் தொகுதி-2 ப-27
10. மேலது தொகுதி-1 ப-112.
11. முனைவர்சா.கிருட்டிணமூர்த்தி அருந்தமிழ்அறிஞர் அ.ச.ஞா ப-64
12. தே.பா. சின்னசாமி ‘சுஅவ்வையாரின் நீதி நூல்கள்சுசு, ப.5
13. குறள் - 76, அதி - 8
14. மணிகேலை ப.11
15. நாலடி பா.எண். 36
16. நாண்மணி பா எண் 40
17. குறள் - 39
18. மேலது - 322
19. புறம் - 189
20. கலித் - 133
21. டாக்டர் சரளா ராஜகோபால், “சங்க இலக்கியம் (அகம்) ப-11
22. ஐங் - 371: 3-5
23. கலித் - 39: 20-25
24. எஸ்.இந்திரா, சங்க இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் அறம்ப-45 இணைய நூல்.
25. புறம் - 186: 1-2
26. கலித் - 10: 5-7
27. மேலது - 130: 19
28. மேலது - 130: 1-4

**ஆய்வுக்கு பயன்பட்ட நூல்கள்**


1. சங்க இலக்கியம் மூலமும் உரையும், கோவிலூர் மடாலயப் பதிப்பகம், கோவிலூர் - 630 307
2. முதல் பதிப்பு - 2004
3. பதினெண் கீழ்க்கணக்கு, மாணவர் பதிப்பகம், சென்னை - 17. ஏப்ரல் - 2003
4. கிருட்டிணமூர்த்தி. சு, அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு பாரிமுனை, சென்னை - 600 108-2008
5. சந்திரசேகரன். இரா, தமிழ் இலக்கியம் - வாழ்வியல் அறம், பாரதியார் நூலகம்
6. யு.வி.ஆர்.அரங்கம்மாள் இல்லம், எண் - 7, ஆர்.கே.நகர், நவாவுர் பிரிவு, மருதமலை சாலை, பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர்.-முதற் பதிப்பு- 2002.
7. பக்த வத்சல பாரதி, பண்பபாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், 8ஃ7 சிங்கர் தெரு பாரிமுனை, சென்னை - 108, முதற்பதிப்பு நவம்பர் 1990
8. சரளாராஜ கோபாலன், சங்க இலக்கியம் (அகம்), மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு பாரிமுனை, சென்னை-2001

9. *சின்ன சாமி.தே.ப (உ.ஆ), அவ்வையாரின் நீதி நூல்கள், (மூலமும், உரையும்),*
*10. மணிவாசகர் பதிப்பகம்-2012*
*11. கலைக் களஞ்சியம் தொகுதி -3, தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை - 600 005, முதற்பதிப்பு 1956.*
*12. பாலுசாமி.நா (பதி .ஆ.), வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-1, தஞ்சைத் தமிழ் பல்கலைக் கழகம், தஞ்சாவுர்-1988*

**References**

1. *Sanga ilakiyam Moolamum uraiyum, Kovilur Monastery Publishing House, Kovilur - 630 307.*
2. *Pathinen Keezhkanakku Noolgal, Student Publishing, Chennai - 17.*
3. *Kirishnamoorthy, S., Aruntamizh Arignar A.sa.Gna, Manivasagar Pathipagam, 31st Singer Street Bar, Chennai - 600 108-2008.*
4. *Chandrasekaran, R., Tamil Literature - Biological Virtue, Bharathiyar Library, UVR Arangammal Home, No. - 7E RK Nagar, Navavoor, Section Maruthamalai Road, Bharathiyar University Coimbatore, First Edition- 2002.*
5. *Bhakta Vatsala Bharati, Culture Anthropology, Manivaskar Publishing House, 8F7 Singer Street ,Chennai – 108, First Edition November 1990.*
6. *Saralaraja Gopalan, Society Literature (Internal), Manivaskar Publishing House, 31st Singer Street, Chennai-2001.*
7. *Chinna Sami, T.B., (e.g.) Aviyayar Judicial texts by (Source and text), Manivaskar Publishing, 2012.*
8. *Art Gallery, Volume-3, Published by Tamil Development Corporation, Chennai - 600 005, First Edition, 1956.*
9. *Balusami.na (Ed. A.), Biological Repository, Volume-1, Tanjore Tamil University, Thanjavur-1988.*